**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.70** **நாள்: 29.05.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பாக 36 சுகாதார மையங்களில் பல்வேறு நோய்களுக்கு சிறப்பு மருத்துவ சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பாக 140 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பொதுவான நோய்களுக்கான சிகிச்சைகளும், 15 நகர்ப்புற சமுதாய நல மையங்கள் மற்றும் 3 அவசரக்கால மகப்பேறு மருத்துவமனைகளில் மகப்பேறு தொடர்பான சிகிச்சைகளும் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், சிறப்பு சிகிச்சை பெற வேண்டிய நோய்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கும் பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் பாலி கிளினிக் மருத்துவமனைகள் (Polyclinics) 2017-2018 ஆண்டில் 36 சுகாதார மையங்களில் ஆரம்பிக்க அனுமதி பெறப்பட்டு முதலாவதாக 14 இடங்களிலும், அடுத்ததாக 5 இடங்களிலும், தொடர்ந்து 17 இடங்களிலும் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

இந்த பாலி கிளினிக் மருத்துவமனைகளில் பொதுமக்களுக்கு நோய்கள் முன்னரே கண்டறிந்து உரிய சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. இந்த மருத்துவமனைகள் வாரத்தில் திங்கள் முதல் சனி வரை மாலை 4.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை செயல்படுகின்றன. திங்கள் முதல் வெள்ளி வரை நாள் ஒன்றுக்கு இரண்டு சிறப்பு மருத்துவ சேவைகளும் சனிக்கிழமை அன்று ஒரு சிறப்பு மருத்துவ சேவையும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்பொழுது ஒவ்வொரு மையத்திலும் தினமும் 30 நபர்கள் முதல் 50 நபர்கள் வரை இச்சேவையால் பயன்பெற்று இலவசமாக சிகிச்சை பெற்று வருகின்றன.

இங்கு கீழ்க்கண்ட சிறப்பு மருத்துவ சேவைகள் வழங்கப்படுகின்றன.

- பொது மருத்துவம்
- மகப்பேறு மற்றும் மகளிர் நல மருத்துவம்
- குழந்தை நலம்
- எலும்பு சார்ந்த நோய்
- பிசியோதெரபி
- பல் மருத்துவம்
- கண் மருத்துவம்
- தோல் மருத்துவம்
- காது / மூக்கு / தொண்டை மருத்துவம்

- மனநல மருத்துவம்

மேலும் ஒருங்கிணைந்த மருத்துவ சேவைகள், தேவையான முக்கிய அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் பெற்று வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறப்பு மருத்துவ சேவைகள் அனைத்தும் பொதுமக்களுக்கு முற்றிலும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் இந்த சேவையை பயன்படுத்த கேட்டுகொள்ளப்படுகின்றனர். இச்சிறப்புச் சேவைகள் கீழ்க்கண்ட மருத்துவமனைகளில் தற்போது செயல்பட்டு வருகின்றது. விவரம் வருமாறு :

| | வ. எண் | மண்டலம் | மையத்தின் பெயர் |
|---|---|---|---|
| முதல் கட்டம் | 1 | 4 | ஆர்.கே.நகர் - நகர்ப்புற சமுதாய நல மையம் |
| | 2 | 5 | பெருமாள்பேட்டை - அவசரக்கால மகப்பேறு மருத்துவமனை |
| | 3 | 5 | சஞ்ஜீவராயன் பேட்டை - நகர்ப்புற சமுதாய நல மையம் |
| | 4 | 6 | புளியந்தோப்பு - நகர்ப்புற சமுதாய நல மையம் |
| | 5 | 7 | பாடி - நகர்ப்புற சமுதாய நல மையம் |
| | 6 | 8 | அயன்புரம் - அயனாவரம் - நகர்ப்புற சமுதாய நல மையம் |
| | 7 | 8 | செனாய் நகர் - நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் |
| | 8 | 9 | மீர்சாகிப்பேட்டை - நகர்ப்புற சமுதாய நல மையம் |
| | 9 | 10 | வடபழனி - நகர்ப்புற சமுதாய நல மையம் |
| | 10 | 10 | சைதாப்பேட்டை - அவசரக்கால மகப்பேறு மருத்துவமனை |
| | 11 | 11 | போரூர் - நகர்ப்புற சமுதாய நல மையம் |
| | 12 | 12 | ஆலந்தூர் - நகர்ப்புற சமுதாய நல மையம் |
| | 13 | 13 | அடையார் - நகர்ப்புற சமுதாய நல மையம் |
| | 14 | 15 | செம்மஞ்சேரி - நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் |
| இரண்டாம் கட்டம் | 15 | 1 | குப்பம் - நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் |
| | 16 | 2 | மணலி - நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் |
| | 17 | 3 | மாதவரம் - நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் |
| | 18 | 12 | முகலிவாக்கம் - நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் |
| | 19 | 15 | துரைப்பாக்கம் - நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் |
| மூன்றாம் கட்டம் | 20 | 1 | கத்திவாக்கம் - நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் |
| | 21 | 2 | இலஷ்மிபுரம் - நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் |
| | 22 | 3 | புழல் - நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் |
| | 23 | 4 | சத்தியமூர்த்தி நகர் - நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் |
| | 24 | 4 | தொற்று நோய் மருத்துவமனை, தண்டையார் பேட்டை |

| | | | |
|---|---|---|---|
| | 25 | 5 | கொண்டித்தோப்பு - நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் |
| | 26 | 6 | செம்பியம் - நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் |
| | 27 | 6 | காசநோய் மருத்துவமனை, புளியந்தோப்பு |
| | 28 | 7 | முகப்பேர் - நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் |
| | 29 | 8 | மறைமலை அடிகளார் நகர் - நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் |
| | 30 | 9 | சாந்தோம் - நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் |
| | 31 | 9 | பகுப்பாய்வு கூடம், நுங்கம்பாக்கம் |
| | 32 | 10 | ஜாபர்கான் பேட்டை - நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் |
| | 33 | 11 | மதுரவாயல் - நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் |
| | 34 | 13 | திருவான்மியூர் - நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் |
| | 35 | 14 | பாலவாக்கம் – நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் |
| | 36 | 15 | கண்ணகி நகர் - நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் |

எனவே, பொதுமக்கள் மேலே குறிப்பிட்டுள்ள மருத்துவமனைகளில் இலவசமாக வழங்கப்படும் சிறப்பு மருத்துவ சேவைகளை பெற்று பயனடையுமாறு ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**